இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண் 4 நவல்பூர் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் நகராட்சி தலைவர் சுஜாதா, துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் வசந்தி, நகரமன்ற உறுப்பினர் வினோத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், இத்தலார் ஊராட்சியில் தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (18.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தனார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் (எ) மாதன் உட்பட பலர் உள்ளனர்.

உச்சநீதி மன்றத் தீர்ப்புக்கு மாறாக - தொடர்ந்து

பிணைகளை மறுப்பது தனி மனித உரிமைக்கு எதிரானதே!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 19-

பிணை வழங்குவது பற்றி உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கு மாறாக, தொடர்ந்து பிணையை மறுப்பது, பிணை வழங்க வேண்டிய பட்சத்தில், புதிய வழக்குப் போட்டு சிறையில் தள்ளுவது தனி மனித உரிமைக்கு எதிரானது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

உச்சநீதிமன்றத்தின் சரியான அறிவுறுத்தல் ஆணையாகPrevention of Money Laundering Act (PMLA) வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் தொடர் பிணை மறுப்பு என்பது, அவர்களது தனி மனித சுதந்திர வாழ்வுரிமையின் பறிப்பே! அவ்வழக்குகளில் வாதாடும் அத்துறையினருடைய பொறுப்பாகும். நீதிமன்றங்களில் அவர்களுக்குப் பிணை (ஜாமீன்) வழங்குவதற்குத் தொடர் மறுப்பு அல்லது உயர்நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றம் தந்துள்ள பிணையை செயல்படுத்த விடாமல், ஒரு புதுவகை வழக்கில் திடீர் கைது போன்ற நடவடிக்கைகள் (வெளிப்படையாக அவை குற்றத் தடுப்புக்குப் பயன்படும் நோக்கத்தைவிட) அவர்கள்மீது வன்மத்தோடு ஏவிவிடப்படும் புதிய வழக்குகள் அரசியல் பின்னணியின் காரணமாக அமைகிறதோ என்ற கருத்துப் பரவலாக ஏற்பட்டு வருவது, நடுநிலை பிறழ்ந்த, ஒரு சார்பு பழிவாங்கும் மனப்போக்கே அடிநீரோட்டமாக உள்ளது என்பதையும் காட்டுகிறது.

இரண்டு முக்கிய கேள்விகளை அண்மைக்கால இந்த ரக வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட (PMLA) தன்மைபற்றி உச்சநீதிமன்றம் எழுப்பியுள்ளது மிகவும் கவனிக்கத்தக்கது; பின்பற்றப்பட வேண்டியது.

உச்சநீதிமன்ற நீதிபதி சஞ்சீவ் கன்னா கருத்து!

உச்சநீதிமன்றத்தின் ஜஸ்டிஸ் சஞ்சீவ் கன்னா தலைமையிலான அமர்வு, 'இந்த சட்டத்தின் அடிப்படையில் கைது செய்துள்ள அமைப்பு, அதன் அடிப்படை தேவை - கைது நடவடிக்கைகள்பற்றி சரியான காரணங்களை முன்வைத்தாகவேண்டும்' என்று கூறியுள்ளது.

"One concerned the question whether an officer arresting a person on moneylaundering charges should demonstrate the necessity for arrest for the action to be deemed valid; and the other voiced shock and revulsion at the ease and quickness with which courts were staying reasoned orders granting bail."

இதன் தமிழாக்கம் வருமாறு:

"ஒரு கேள்விக்கு ஆதங்கமாக கருதப்படுவது, பண மோசடித் தடுப்புச் சட்டத்தின்படி ஒரு அதிகாரி கைது செய்யப்படும் பொழுது, கைதிற்கான காரணத் தேவை என்பதைச் சொல்லாத நிலை தான் - அத்தகைய கைது சரியெனக் கருதிடும் சூழலும் உருவாகிறது. அதே நேரத்தில், பட்டறியும் காரணத்தின் எளிதாகவும், விரைவாகவும் நீதிமன்றங்கள் பிணை நிறுத்திடுவது, ஒப்பீட்டளவில் அதிர்ச்சியாகவும், வெறுப்பாகவும் தோன்றுகிறது."

அண்மையில் டில்லி யூனியன் பிரதேச முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு அளிக்கப்பட்ட பிணை, அதனை உடனடியாக மற்றொரு நீதிமன்றம் நிறுத்தி வைத்து (Stay), அவருக்கு அளிக்கப்பட்ட பிணை, இரண்டாவது தடவை பிணை செயலற்றுப் போகுமாறு செய்ததையே சுட்டிக்காட்டியுள்ள 64 பக்கம் உள்ள அந்தத் தீர்ப்பில்,

"மேலும் பல நீதிபதிகள் கொண்ட பெரிய அமர்வின்மூலம் ஒரு சரியான நிலையான தரவுகளுடன் கூடிய தீர்வு உருவாக்கப்படவேண்டும்" என்று ஒரு யோசனையையும் தெரிவித்துள்ளார்.

பொதுவாக சட்டத்தின் மொழியில் ஒரு முக்கிய கருத்துரை உண்டு.

"Bail is a general rule
Jail is an exception"

பொதுவான உரிமை (குற்றம் சுமத்தப்பட்டோரின் பிணை (ஜாமீன்) என்பதே உரிமை! (Rights). சிறை என்பது அதற்கான விதிவிலக்கு போன்றதே) என்பதே அது!

மேலும் அது நீதிபதிகள் முழு சுதந்திரத்தையொட்டிய தன்னுணர்வின் வெளிப்பாடு (Discretionary Power) என்பதாகும்.

பிணை மறுப்பு சரியல்ல!

ஆனால், தற்போது நீதிமன்றங்களில் காணும் காட்சிகள் என்ன?

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து பிணை மறுப்பு என்பது சரியல்ல! பல வழக்குகளில், வழக்கு தாக்கல் செய்யும் அரசு தரப்பில் கூறப்படும் வாதங்களைக் கேட்டு, அதன்படி பிணை உரிமையை (Right to get bail) பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுப்பது, அதுவும் தொடர்ந்து மறுப்பது சரியானதல்ல.

முந்தைய பல தீர்ப்புகளில் கீழமை நீதிமன்றங்களில் "மெக்கானிக்கலாக" (மனதை ஆழ்ந்து செலுத்திப் பாராமல்) பிணை மறுப்பது கூடாது என்ற எச்சரிக்கை ஆணையை, உச்சநீதிமன்றம் தந்துள்ளது - மனித சுதந்திரக் காப்பின் முக்கியத்துவம் வாய்ந்த முத்திரை தீர்ப்பு.

அருள்கூர்ந்து இதனை நடைமுறைப்படுத்தி - அரசியல் பழிவாங்கும் வழக்குகளில் சிறையில் வாடுவோர் - அதன் தன்மைகளை நடுநிலையோடு ஆராய்ந்து சரியாகப் பயன்படுத்திடவேண்டும்.

நிரபராதிகள் தண்டிக்கப்படவே கூடாது - குற்றவாளிகள் தப்பினாலும் கூட என்பதுதானே, கிரிமினல் சட்டத்தின் முக்கிய கோட்பாடு! நியாயங்கள் நிலைக்கட்டும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

நீலகிரியில் கடும் மழை - மீட்புப் பணிகளுக்கு

தயார் நிலையில் மாநில பேரிடர் மீட்புப் படையினர்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

நீலகிரி, ஜூலை 19-

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட இத்தலார் உள்ளிட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், இத்தலார் ஊராட்சியில் தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (18.07.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்த வண்ணம் உள்ளது. இத்தலார் பகுதியில் நேற்றைய முன் தினம் மற்றும் நேற்றைய தினம் ஆகிய இரண்டு நாட்கள் அதிகளவில் மழை பெய்ததால் தடுப்புச்சுவர் இடிந்து, அந்த மண் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. ஆகவே, வருவாய்த்துறையினருடன் இணைந்து இப்பகுதிக்கு வருகை தந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதி வாழ் மக்கள் தடுப்புச்சுவர் கட்டித்தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஆண்டுக்குள் தடுப்புச்சுவர் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகம் பருவ மழை முன்னேற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையை எதிர்கொள்ள வட்டார அளவில் தமிழ்நாடு மாநில பேரிடர் நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளனர்.

மாநில பேரிடர் மீட்பு படையினரை பொறுத்தவரை குந்தா பகுதியில் 10 நபர்களும், கூடலூர் பகுதியில் 10 நபர்களும், பந்தலூர் பகுதியில் 10 நபர்களும் அங்கேயே தங்க வைக்கப்பட்டு, தயார் நிலையில் இருந்து, மழை மற்றும் காற்றின் காரணமாக சாலையில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தி பொது மக்களுக்கு எவ்வித சிரமமின்றி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முன்னேற்பாடு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பொதுமக்கள் எவ்வித அச்சமும் அடைய தேவையில்லை.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் (எ) மாதன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், குந்தா வட்டாட்சியர் திருமதி. கலைச்செல்வி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் உமாசங்கர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், இத்தலார் ஊராட்சி தலைவர் பந்தையன் உட்பட பலர் உடனிருந்தனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.

வேளச்சேரி மேற்குப் பகுதியில் வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!

பகுதிச்செயலாளர் அரிமா சு. சேகர் வேண்டுகோள்!

சென்னை, ஜூலை 19 -

வேளச்சேரி மேற்கு பகுதியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார். இது குறித்து பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மாவட்ட கழக செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமையில் வேளச்சேரி மேற்கு பகுதியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் இன்று (19-07- 2024) காலை 7.30 மணிக்கு 175வது வட்டம் பெரியார் நகர் நேதாஜி சாலையில் தொடங்கி கீழ் கண்ட நேரப்படி வேளச்சேரி மேற்கு பகுதியில் உள்ள அணைத்து வட்டங்களிளும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்கள்.

காலை 7.30 மணி 175வது வட்டம்,
காலை 8.00 மணி 175 'அ' வட்டம்,
காலை 8.30 மணி 176வது வட்டம்,
காலை 9.00 மணி 176 'அ' வட்டம்,
காலை 9.30 மணி 177வது வட்டம்,
காலை 10.00 மணி 177 'அ' வட்டம்,
காலை 10.30 மணி 178வது வட்டம்,
காலை 11.00 மணி 178 'அ' வட்டம் என்ற விவரப்படி இன்று தென்சென்னை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் திறந்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிக்கு வேளச்சேரி மேற்கு பகுதிக்கு உட்பட்ட மாநில மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆள்கடத்தல், கொலை மிரட்டல் வழக்கிலும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கைது!

புகாரின் பேரில் காவல்துறை நடவடிக்கை!

கரூர், ஜூலை 19 –

100 கோடி ரூபாய் நில மோசடி புகாரை தொடர்ந்து ஆள்கடத்தல், கொலை மிரட்டல் வழக்கிலும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரூரில் தனது 100 கோடி ரூபாய் மதிப்பிலான 22 ஏக்கர் நிலத்தை போலி ஆவணம் தயாரித்து அபகரித்துவிட்டதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது, அக்கட்சியைச் சேர்ந்த பிரகாஷ் என்பவர் காவல் துறையில் புகார் அளித்திருந்தார். இதுதொடர்பாக சி.பி.சி.ஐ.டி., விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் சி.பி.சி.ஐ.டி., காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கினர். இந்நிலையில், தாம் கைது செய்யப்படுவோம் என அஞ்சி எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமறைவானார். நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த முன்ஜாமின் மனுக்கள் அனைத்தையும் கரூர் முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதனையடுத்து எம்.ஆர்.விஜயபாஸ்கரை கைது செய்வதற்காக, அவரை தேடும் பணியில் சி.பி.சி.ஐ.டி., காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், 40 நாட்களுக்கும் மேலாக தலைமறைவாக இருந்த எம்.ஆர்.விஜயபாஸ்கரை கேரளாவில் சி.பி.சி.ஐ.டி., காவல்துறையினர் அதிரடியாக கைது செய்தனர். அவருடன் பிரவீன் என்பவரும் கைது செய்யப்பட்டார். இருவரையும் தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்த காவல் துறையினர், பல மணி நேர விசாரணைக்கு பின்பு, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், ஆள்கடத்தல், கொலை மிரட்டல் வழக்கிலும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கைது செய்யப்பட்டுள்ளார். நிலத்தின் உரிமையாளரும், அ.தி.மு.க. பிரமுகருமான பிரகாஷ், கரூர் மாவட்டம் வாங்கல் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் எம்.ஆர்.விஜயபாஸ்கரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து அவரிடம் விசாரணை நடத்த கரூர் நீதிமன்றத்தில் காவல்துறையினர் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி3/ 2728 /2024 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Relaying of BT road at Swamy Sivanandha Salai & Island Ground in Zone - 5 & 9

பணியின் உத்தேச தொகை குறைந்தபட்சம் **ரூ.135.00 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 %**
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 30.07.2024 அன்று மாலை 3.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 31.07.2024 அன்று மாலை 3.30 மணி
மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2444 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**

சென்னை பெருநகர மாநகராட்சி நிதிநிலை அறிவிப்பின்படி, 2024-25ஆம் கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் பயிலும் 4 மற்றும் 5ஆம் வகுப்பு மாணவர்கள் கல்விச்சுற்றுலா செல்லும் வாகனங்களை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (18.07.2024) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), கல்வி அலுவலர் திருமதி வசந்தி, உதவி கல்வி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில்

பொது விநியோகத் திட்டத்திற்காக துவரம் பருப்பு, பாமாயில் கொள்முதல்!

அரசு டெண்டர் கோரியுள்ளது !

சென்னை, ஜூலை 19-

தமிழ்நாட்டில் பொது விநியோக திட்டத்தின் கீழ், நியாய விலைக்கடைகளில் அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. சர்க்கரை, பருப்பு, பாமாயில் உள்ளிட்டவை குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில் பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் தங்கு தடை இன்றி விநியோகம் செய்ய வசதியாக அவற்றை கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

அடுத்த இரண்டு மாதத்திற்குத் தேவையான 4 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் மற்றும் 40 ஆயிரம் மெட்ரிக் டன் துவரம் பருப்பை கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் டெண்டர் கோரியுள்ளது.

துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை விரைவாக கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் வகையில் குறுகிய கால டெண்டர் விடப்பட்டுள்ளது.

பொருட்களை விநியோகம் செய்ய விரும்பும் நிறுவனங்கள் டெண்டர் ஆவணங்களை வருகிற 27 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் பருப்பு மற்றும் பாமாயில் எந்தவித தங்கு தடையும் இன்றி விநியோகம் செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடசென்னை – திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மாவட்டச் செயலாளர் மாவதரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்! கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உடன் உள்ளனர்.